**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C. 359/2025**

**Prosecution witness : அ.சா.9** **Date : 23.01.2026.**

| | |
|---|---|
| **Name : சீனிவாசன்** | **Taluk :** |
| **Father's Name :** | **Calling :** |
| **Village :** | **Age :** |

**(Accused present. )** சாட்சி ஆஜர். சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு, முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்பட்டது.

**முதல் விசாரணை**

1) நான் தற்போது கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 18.05.2025ம் தேதி கருமலைக்கூடல் காவல் நிலையத்தில் நிலையப்பொறுப்பில் இருந்தபோது, மேட்டூர் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற காயத்தகவலின் பேரில் அங்கு சென்று உள்நோயாளியாக இருந்த மகுடேஸ்வரன், த/பெ.தனகோடி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். வாக்குமூலத்தின் தன்மைக்கு ஏற்ப கருமலைக்கூடல் காவல் நிலைய குற்றஎண்.254/2025 ச/பி 281, 125(a), 106(1) BNS பிரிவில் வழக்கு பதிவு செய்தேன். **முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4 ஆகும்.**

2) பின்னர் புகார்மனு மற்றும் அசல் முதல்தகவல் அறிக்கையை குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2 அவர்களுக்கு அனுப்பியும், மற்ற நகல்களை சம்மந்தபட்ட அலுவலர்களுக்கு அனுப்பிவைத்தேன். புலன் விசாரணைக்காக காவல் ஆய்வாளர் வசம் ஒப்படைத்தேன். ஆய்வாளர் என்னை விசாரித்தார்.

**எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை–**

3) நான் முதல் தகவல் அறிக்கை மட்டுமே பதிவு செய்தேன் என்றால் சரிதான். மருத்துவமனையிலிருந்து யார் எனக்கு தகவல் கொடுத்தார்கள் என்று முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை. முதல் தகவல் அறிக்கை மாலை 6 மணிக்கு பதியப்பட்டது என்றால் சரிதான். நானே சென்று மருத்துவமனையில் வாக்குமூலம் பெற்றேனா என்றால் ஆமாம். மருத்துவமனைக்கு நானே நேரடியாக சென்று வாக்குமூலம் பெற்றேன் என்றால்

சரிதான். விபத்தில் பாதிக்கப்பட்ட சுரேந்தர் என்பவரிடம் நான் வாக்குமூலம் வாங்கவில்லை என்றால் ஆமாம். மருத்துவமனைக்கு நான் வாக்குமூலம் பெற சென்ற போது சுரேந்தர் என்பவர் உயிருடன் இருந்தாரா என்றால் இல்லை.

4) முதல் தகவல் அறிக்கையில் விபத்தில் காயம்பட்டவர் என்று தான் குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். மருத்துவமனையில் வாக்குமூலம் பெற்று முதல் தகவல் அறிக்கை எத்தனை மணிக்கு பதிவு செய்தேன் என்றால் 06.30 பதிவு செய்த நேரம். அதற்கு முன்னர் 1 மணிநேரத்திற்கு முன்னர் மருத்துவமனையில் வாக்குமூலம் பெற்றேன், அதனை முதல் தகவல் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை.

5) விபத்தில் பாதிக்கப்பட்டவர்கள் வீரக்கல் என்ற இடத்திலிருந்து கருமலைக்கூடல் நோக்கி வந்தவர்கள் என்றால் ஆமாம். ஆனால் வரைபடத்தில் வீரக்கல்புதூரிலிருந்து கருமலைக்கூடல் செல்லும் வழியில் இடது புறமாக விபத்து நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ஆமாம். மாருதி வேன் தவறான திசையில் வந்து அடித்ததை என் அனுமானமாக எடுத்துக் கொண்டேன் என்றால் ஆமாம்.

6) சம்பவம் இடம் வளைவான திருப்பம் என்பதால் வீரக்கல்லில் இருந்து கருமலைக்கூடல் நோக்கி செல்லும் போது கருமலைக்கூடலில் எதிர் திசையில் வரும் வாகனத்தை கவனிக்க வாய்ப்பில்லை என்றால் ஆமாம். மருத்துவமனையில் வாக்குமூலம் வாங்கும் போது விபத்தில் பாதிக்கப்பட்டவர் மதுபோதையில் இருந்தாரா என்று நான் மருத்துவர்களிடம் உறுதி செய்து கொள்ளவில்லை என்றால் ஆமாம்.

7) தெளிவாக ஆம்னி வேன் மூலம் மோதினார் என்ற விவரம் பாதிக்கப்பட்டவர் வாக்குமூலத்தில் சொல்லவில்லை என்றால் இல்லை. விபத்தில் இறந்தவர் சம்பவயிடத்தில் காயம்பட்டவர் உயிரோடு தான் இருந்தார் என்றால் நான் வாக்குமூலம் வாங்கும் போது விபத்தில் பாதிக்கப்பட்டவர் இறந்துவிட்டார் என்று கூறி சவக்கிடங்கிற்கு அனுப்பி விட்டார்கள் என்றால் ஆமாம்.

8) நான் பதிவு செய்த வாக்குமூலத்தில் மேட்டூர் அரசு மருத்துவமனையில் முதலுதவி சிகிச்சை பெற்ற போது அவருக்கு மூச்சு திணறல் இருந்ததாக குறிப்பிட்டுள்ளேன் என்றால் ஆமாம். நான் வாக்குமூலம் வாங்கும் போது பாதிக்கப்பட்ட சுரேந்தர் சவக்கிடங்கில் இருந்தார் என்றால் ஆமாம். வாக்குமூலம் கொடுத்த மகுடேஸ்வரன் குடிபோதையில் இருந்தார். ஆனால் சவக்கிடங்கில் இருந்த சுரேந்தர் என்பவர் மதுபோதையில் இருந்தாரா என்பது எனக்கு தெரியாது. சுரேந்தர் மது போதையில் இருந்தாரா என்று மருத்துவ குறிப்பை பார்த்தால் தான் தெரிய வரும்.

9) எதனால் சேலம் அரசு மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு கொண்டு சென்றார்கள் என்றால் மூச்சு திணறல் காரணமாக கொண்டு சென்றதாக மகுடேஸ்வரன் வாக்குமூலத்தில் சொன்னார். எதனால் பாதி வழியில் திரும்ப மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு கொண்டு வந்தார்கள் என்றால் இறந்திருப்பார் என்ற அனுமானத்தின் பேரில் திரும்ப அழைத்து வந்திருக்கலாம். வாக்குமூலத்தில் ஏன் மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு திரும்ப அழைத்து வந்தார்கள் என்று தெளிவான விளக்கம் சொல்லவில்லை என்றால் ஆமாம்.

10) மருத்துவர் மீண்டும் மேட்டூர் அரசு மருத்துவமனைக்கு வந்த பின்னர் பரிசோதனைக்கு பின்னர் மருத்துவர் அவர் இறந்துவிட்டதாக கூறினார் என்று மகுடேஸ்வரன் வாக்குமூலம் கொடுத்தார். ஆக நான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்த போது பாதிக்கப்பட்டவர் இறந்து போனார் என்பதை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் நான் மாலை நேரில் பார்த்தேன்.

11) முதலுதவி செய்த பின் சேலம் அரசு மருத்துவமனைக்கு அனுப்பும் போது எந்தவித காவல் துறை பாதுகாப்பின்றி மருத்துவமனைக்கு மேல் சிகிச்சைக்கு சென்றார்கள் என்றால் அவ்வாறு சொல்ல முடியாது. மேல் சிகிச்சைக்கு சென்ற விவரம் காவல் நிலையத்திற்கு கிடைக்கப்பெறவில்லை. இந்த விபத்தின் காரணமாக தான் இறப்பு ஏற்பட்டது என்பது மறுக்கப்படுகிறது என்றால் சரியல்ல.

**<u>மறுவிசாரணை இல்லை.</u>**

**ஒம்/– தே.மயில்சாமி**
**குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2**
**மேட்டூர்.**